# ஹக்மன பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 செப்தெம்பர் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 நவம்பர் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஹக்மன பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதியான ரூபா 76,025 தொகையானது மூலதனச் செலவினக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினக் கணக்கான காகிதாதிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 76,025 பெறுமதியான நூலகப் புத்தகங்களுக்காகப் பெறப்பட்ட ரூபா 11,274 கழிவு கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) கோங்கல தெவெனிகேவத்த வீதியை நிர்மாணிப்பதற்குரிய ரூபா 976,038 தொகையான செலவினம் இரு தடவை கணக்குகளில் வைக்கப்பட்ட தவறைத் திருத்துவதற்காக கடன்கொடுத்தோரை மூலதனக் கணக்கில் வரவு வைத்து

உரிய செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ரூபா 51,574 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 893,472 தொகையான பங்களிப்புப் பணம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,399,544 ஆக இருந்ததுடன் பேரேட்டின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,678,486 ஆக இருந்தமையால் ரூபா 1,721,058 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 70,702 தீர்க்கப்படாத வரவு மீதியொன்று காணப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,040,140 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் 07 கணக்கு விடயங்களைச் சேர்ந்த ரூபா 110,719,332 பெறுமதியான மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாண ங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை- 1988 | |
| (i) | விதி 143 | ஒவ்வொரு வைப்பு வகைகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை தொடர்பாக விபரமான அறிக்கையொன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 153 | பிரதேச சபை படிவம் 07 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக சுருக்க கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| (iv) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 418,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 345,862 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி % | குறைதல் சதவீதப்படி % |
|---|---|---|---|---|
| | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. | | |
| ஏக்கர் வரி | 68,180 | 60,600 | 12 | - |
| வீதவரி | 714,510 | 768,629 | - | 7 |
| நீர்க் கட்டணம் | 1,283,479 | 872,870 | 47 | - |
| கடை வாடகை | 782,445 | 876,345 | - | 11 |
| நில வரி | 196,290 | 155,900 | 26 | - |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 782,690 தொகையான வாடகை மற்றும் கட்டணங்கள் என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்**

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதிவான் நீதி மன்றங்களினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்து பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 405,136 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 1,810,798 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீடு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| **மீண்டுவரும் செலவுகள்** | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 13,542 | 12,009 | 1,533 | 11,202 | 11,074 | 128 |
| ஏனையவை | 8,649 | 9,992 | (1,343) | 7,370 | 7,250 | 120 |
| உப கூட்டுத் தொகை | 22,191 | 22,001 | 190 | 18,572 | 18,324 | 248 |
| மூலதன செலவுகள் | 2,500 | 48,765 | (46,265) | 2,500 | 135,659 | (133,159) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 24,691 | 70,766 | (46,075) | 21,072 | 153,983 | (132,911) |

======= ======= ====== ======= ======= ======

மீளாய்வாண்டில் 12 செலவினத் தலைப்புகளில் ரூபா 131,500 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 15 செலவினத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை விஞ்சி செலவு செய்யப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | - |
| இரண்டாம் தரம் | 08 | 06 |
| ஆரம்ப தரம் | 26 | 18 |
| ஏனையவை(அமைய/ தற்காலிக | - | 38 |

(அ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் பதவியணினரின் சம்பளம் மற்றும் உறுப்பினர்களின் படிகள் என்பவைகளுக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 11,911,008 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 8,098,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபைக்கு ரூபா 3,813,008 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 38 அமைய ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 3,421,651 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இச் சுற்றுநிருபத்தை மீறும் வகையில்

ஆட்சேர்ப்புக்களைச் செய்தால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட ரீதியில் பொறுப்பினைக் கூற வேண்டும் எனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

(அ) சபைக்குரிய ரூபா 1,476,376 பெறுமதியான 05 நிலையான சொத்து விடயங்கள் கணக்காய்வுத் திகதியான 2011 செப்தெம்பர் 28 வரையிலும் செயற்பாடற்று மற்றும் குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்டது.

(ஆ) பின்வரும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் 2011 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் தகுதியற்றமையினால் செயற்பாடற்றிருந்தது.

- ❖ நீர் இறைப்புக்களிலிருந்து அகற்றப்பட்ட 04 மின்சார மோட்டார்கள்
- ❖ சென்ட்ரிக் தண்ணீர் பம்பி
- ❖ 02 கைரெக்டர்கள் லோறல் ரோடரியுடன்
- ❖ ஹொண்டா மோட்டார் சைக்கில் (131-3031)

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பதவியணிக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,824,082 ஆக இருந்ததுடன் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகள் ரூபா 3,448 ஆகும்.

### 2.5.3 பதிவேடுகள் பேணுவதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் பதிவேடுகள் நாளதுவரையாகவும் முறையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

- ❖ கடன்கொடுத்தோர் பதிவேடு
- ❖ கடன்பட்டோர் பதிவேடு
- ❖ பதவியணியினர் கடன்பதிவேடு
- ❖ வைப்புப் பதிவேடு
- ❖ வருமானப் பதிவேடு

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 2.6.1 வீதி விளக்கு பராமரித்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக மின்சார உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யும் போது தேவையின் பிரகாரம் பராமரிப்பு மின்சார தொழில்நுட்பவியலாளரின் அங்கீகாரங்கள் என்பனவற்றின் பிரகாரம் அவைகளின் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகள் ஒன்றறையொன்று வெவ்வேறாக இனங்காண்பபதற்கான இலக்கம் அல்லது குறியீட்டு முறைமையொன்று பயன்படுத்தப்பட்டு ஒவ்வொரு வீதி விளக்குகளுக்குமாகான மின் குமிழ்கள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் பொருத்துகின்ற போது பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக சபை செலவிட்ட ரூபா 136,584 தொகை இலங்கை மின்சார சபையிடமிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக கூட்டுப்பசளைப் பாத்திரங்கள் கொள்வனவு

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் யூன் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட 100 பாத்திரங்களில் ரூபா 25,200 பெறுமதியான 21 பாத்திரங்கள் 2011 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்தமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தினை அமுல்படுத்த முடியாதிருந்தது.

### 2.6.3 அனுமதியற்ற நிர்மாணங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126(vii) இன் (உ),(ஊ) மற்றும் 126(ix) ஆம் பிரிவுகளின் பிரகாரம் 09 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஹக்மன வேபதஇற அமரதாச கலப்பதி மாவத்தையில் அனுமதியற்று நிர்மாணிக்கப்பட்டிருந்த இரு மாடிக்

கட்டிடத்திலிருந்து ரூபா 8,223 தொகையான காப்பு அங்கீகாரம் வழங்கும் போது அறவிட வேண்டியிருந்த கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.6.4 கட்டிட விண்ணப்பம் படிவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய வருடங்களுக்குரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்களுக்காக காலம் நீடிக்கப்பட்டிராததுடன் சரியாகப் பூர்த்தியடைந்த கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கோ.இ.2010/09ஏ ஆம் இலக்க கட்டிட விண்ணப்பத்தின் பிரகாரம் 391.40 மீற்றர் வியாபார உபயோகத்திற்கான கட்டிடத்திற்காக 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் பிரகாரம் வாகனம் நிறுத்தும் இடம் கட்டிட வரைபடத்திட்டத்தில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காண்பிக்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் வாகனம் நிறுத்தும் இடத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 500,000 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.6.5 பிரதேச சபைச் செயற்பாடுகளுக்கான உறுப்பினர்களின் பங்களிப்பு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தலைவர், உபதலைவர் உள்ளடலங்கலாக 08 உறுப்பினர்களைக் கொண்ட சபையின் உறுப்பினர்களுக்காக ரூபா 585,000 தொகைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் 12 சபை அமர்வுகளிலும் தலைவர் உள்ளடலங்கலாக நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே சமூகமளித்திருந்தனர்.

(ii) மீளாய்வாண்டின் போது தலைவரின் 05 பிரேரணைகள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய உறுப்பினர்களின் பிரேரணைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.6 நீர்க் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் பராமரிக்கப்படுகின்ற நீர் வழங்கல் பிரிவின் நுகர்வோர்களின் எண்ணிக்கை 821 ஆக இருந்ததுடன் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் தேறிய செயற்பாட்டு நட்டம் ரூபா 2,848,185 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் போது செய்யப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் செயற்பாட்டு நட்டம் ரூபா 2,734,355 ஆக இருந்தது.

(ii) 85 நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியிருந்த ரூபா 802,121 தொகையான நிலுவையாக இருந்த பணத்தை அறவிடுவதற்காக உடன்படிக்கையின் நிபந்தனை இல. 03 இன் பிரகாரம் நீர் இணைப் பிணைத் துண்டித்தல், பிணைப் பணத்திலிருந்து அறவிடுதல் அல்லது சட்டத்தினால் நடவடிக்கை எடுத்தல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) நீர் மாணி செயற்படாத காரணத்தினால் பொதுவாக கட்டணம் அறவிடப்படும் 112 நீர்ப்பாவனையாளர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 225.060 ஆகும். செயற்பாடற்ற நீர் மாணிக்காக புதிதாக நீர் மாணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் உள்ளவாறான நீர்ப் பாவனைக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.6.7 களஞ்சிய இருப்புக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டில் களஞ்சியத்தைப் பொறுப்பேற்ற அபிவிருத்தி உதவியாளருக்கு களஞ்சிய இருப்பு மெய்மையாய்வு செய்யப்படாமல் கையளிக்கப்பட்டமையினால் களஞ்சிய ஏடுகள் சமப்படுத்தப்படாமல் பேணப்பட்டிருந்தது.

(ii) 2009 தொடக்கம் 2011 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட ரூபா 29,740 பெறுமதியான 04 பொருள் வகைகள் பற்றாக்குறையாக இருந்தது.

(iii) களஞ்சிய பொருட்களை முறையான பிரகாரம் வைத்துக் கொள்வதற்காக களஞ்சிய வசதிகள் காணப்படாமை மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் பொருட்களைக் கையேற்றல், விநியோகித்தல் என்பவைகளுக்கான முறைமையொன்றும் காணப்படவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) செலவினக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்